# மெட்ரோவில் பயணித்த 19.21 லட்சம் பேர்

சென்னை, டிச. 2–

சென்னை மெட்ரோ ரயிலில், 19.21 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில், செப்., 7ல் இருந்து, நவ., 30 வரை, 19.21 லட்சம் பேர் பயணித்துள்ளனர். நவம்பரில் மட்டும், 8.58 லட்சம் பேர் பயணித்து உள்ளனர்.



மெட்ரோவில், சமீபத்தில் துவங்கிய, 'கியு ஆர்' குறியீடு வசதியில், டிக்கெட் பெற்று, நவம்பரில் மட்டும், 21 ஆயிரத்து, 579 பேரும், 'டிராவல் கார்டு' பயன்படுத்தி, 4.72 லட்சம் பேரும் பயணித்துள்ளனர்.

இவ்வசதியில், டிக்கெட் எடுத்து பயணம் செய்பவர்களுக்கு, 20 சதவீதம் கட்டண சலுகையும், 'டிராவல் கார்டு' பயன்படுத்தி பயணம் செய்பவர்களுக்கு, 10 சதவீதம் கட்டண சலுகையும் வழங்கப்படுகிறது.